மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 22 வியாழக்கிழமை (05 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 158

# கட்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடும்போக்கைக் கடைப்பிடிக்க விஜேதுங்க முடிவு!

## பூநகரித் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலி!

### மற்றும் இருவர் படுகாயம்

பூநகரியில் உள்ள வடமேற்கு இராணுவ நிலை மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று கொழும்பில் இராணுவம் அறிவித்தது.

இரு படையினர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கொழும்பு பங்குச் சந்தை வர்த்தகம் மேலும் வீழ்ச்சி!

கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் மேலும் வீழ்ச்சி காணப்படுவதாக தூரகிழக்கு ஒலிபரப்பு அமைப்பு அறிவித்தது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவும் உட்கட்சி மோதலே பங்குச்சந்தையில் தொடர்ந்து வீழ்ச்சி காணப்படுவதற்கு காரணம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் —

முதலீடு செய்பவர்களும் பங்குகளை வாங்குபவர்களும் அவதானமாக செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுவதாகவும் —

அந்த ஒலிபரப்புச் சேவையில் மேலும் அறிவிக்கப்பட்டது. [உ-எ]

## நீர்கொழும்பு நீதிமன்றில் துப்பாக்கிப் பிரயோகம்!

நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட சிந்த அமரசிங்கா என்ற சந்தேக நபர் மீது நீதிமன்றில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் ஆளுங்கட்சி முக்கியஸ்தர் ஒருவருக்கு ஆதரவான குழுவொன்றுடன் கருத்து வேற்றுமை கொண்டிருந்தார் என்றும் ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன. (த-6)

### நுவரெலியாவில்

## இ.தொ. காவின் மேதினத்தில் லட்சக்கணக்கான மக்கள்!

கொழும்பு, மே 5

நுவரெலியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதின விழா ஊர்வலத்தில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நுவரெலியா முழுவதும் இ. தொ. காவின் பதாகைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன என்றும் —

நுவரெலியா பஸ் நிலையத்தில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பிக்க வேண்டிய மேதினப் பேரணி, தொண்டமான் கொழும்பில் இருந்து வருவதில் ஏற்பட்ட தாமதத்தால் பலமணி நேரம் சுழித்தே ஆரம்பித்தது என்றும் — எனினும் திரண்டிருந்த மக்கள் தொண்டமான் வந்து சேரும்வரை கலையாமல் இருந்தனர் என்றும் சிங்கள நாளிதழான லங்காதீப செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தொண்டமானின் பெரிய உருவப்படங்கள் மூன்று ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

### தேர்தல்களை ஒட்டி அரசு அறிவித்த

## நிவாரணத் திட்டங்களால் பணவீக்கம் 20வீதம் உயரும்

கொழும்பு, மே. 5

தேர்தல்களை ஒட்டி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிவித்துள்ள நிவாரணத் திட்டங்கள் அமுலாக்கப்படும் போது நாட்டில் பணவீக்கம் 20 சதவீதமாக — இவ்வாண்டு முடிவில் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த டிசம்பரில் 11 5 சதவீதமாக இருந்த பணவீக்கம் இப்போது 14 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து கைவிடப்பட்ட மக்கள் நலன் புரித் திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி மாணவருக்கு இலவச சீருடை, மதிய உணவு ஆகியவற்றை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரேமதாஸாவினால் ஆரம்பிக்கப்பட்டு அவர் மறைந்த பின்னர் கைவிடப்பட்ட — 15 ஆயிரம் அபிவிருத்தித் திட்டங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செலவுகளை கட்டுப்படுத்த அரசு முயற்சி!

கொழும்பு, மே 5

அதிகரித்து வரும் பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக —

பாதுகாப்புச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாயிரம் கோடி ரூபாவுக்கு அதிகமான தொகை ஆண்டு தோறும் பாதுகாப்புச் செலவுகளுக்காக விரயமாகி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## தம்முடன் முரண்பட்டு நிற்கும் பலரை பதவி நீக்கம் செய்வார்

கொழும்பு, மே 5

தென்மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தாம் இழந்து வரும் அதிகாரத்தை, மீண்டும் கைப்பற்றவும், கட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் கடும் போக்கைக் கடைப்பிடிப்பது என கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி. பி, விஜேதுங்க முடிவு செய்திருக்கிறார்.

கட்சியிலும் அரச உயர் பதவிகளிலும் தம்முடன் முரண்பட்டு நிற்கும் பலரை அவர்களது பதவிகளில் இருந்து அகற்றிவிட்டு அந்த இடங்களுக்கு தமக்கு வேண்டியவர்களை — தம்முடன் நெருங்கியவர்களை — நியமிக்க அவர் முடிவு செய்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

உட்கட்சிப் பூசல் நிறைந்துள்ள ஆளும் கட்சியில் தனது பிடியைப் பலப்படுத்துவதில் ஜனாதிபதி விஜேதுங்கா இப்போது ஈடுபட்டிருக்கிறார்.

இதனால் செய்தித் தகவல் அமைப்புகளிலும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஏனைய நிறுவனங்களிலும் மாற்றங்கள் ஏற்படுவது நிச்சயம் என நம்பப்படுறது.

இதன் ஒரு கட்டமாகவே ''லேக் ஹவுஸ்'' தலைவரும், அதன் முக்கிய பத்திராதிபர்களில் ஒருவரும் பதவி இழந்தனர். தம்முடன் ஒத்துவராத அந்த இருவரையும் அகற்றிவிட்டு அந்த இடங்களுக்கு தமக்கு வேண்டியவர்களை டி.பி. விஜேதுங்க நியமிக்கவிருக்கிறார்.

ஜனாதிபதி தமது பிடியை இறுக்கத் தொடங்கியிருப்பதை அடுத்து —

முக்கிய பதவிகளில் இருந்து மேலும் பலர் விலகுவதை அடுத்து வரும் நாட்களில் காணக்கூடியதாக இருக்கும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர். (உ-ஏ-6)

## ஒய்வூதியம் தாமதமாகும்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் மே மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தாமதமாகவே கிடைக்கும் என அறிய வந்துள்ளது.

மே மாதத்துரிய ஒய்வூதிய வவுச்சர்களைத் தயாரிக்கும் வேலைகள் கொழும்பில் இன்னும் பூர்த்தி அடையவில்லை என்றும்

ஆனேகமாக இவ்வாரத்தில் வேலைகள் பூர்த்தியாகும் என்பதால் அடுத்து வடக்கு வரும் கப்பலிலேயே வவுச்சர்கள் அனுப்பப்படும் என்றும் — அரச அதிபருக்கு நேற்றுத் தகவல் கிடைத்தது. (அ-3)

## 4 சிப்பாய்கள் தடுப்புக்காவலில்!

கொழும்பு, மே 5

தடை செய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கடத்துவதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு இராணுவத்தினர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

கடந்த சில காலமாக இவர்கள் கடத்தல் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என விசாரணையில் தெரியவந்ததாகவும் —

வவுனியா நகருக்கு அப்பால் உள்ள நொச்சிமோட்டை சோதனைத் தடை முகாமில் இந்தப் படையினர் பணியாற்றி வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கொள்கை வகுக்கும்

## செயற்குழுவில் இருந்தும் கூரேயை விலக்க முயற்சி

கொழும்பு, மே 5

அமைச்சர் சிறிசேன கூரேயை ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை வகுக்கும் செயற்குழுவில் இருந்து விலக்கும் நடவடிக்கையை ஐ. தே. க. தலைமைப்பீடம் மேற்கொண்டு வருகிறது.

இத்தகவலை கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது

இதனிடையில் தம்மை அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யும்படி கேட்டுக் கொண்டால் தாம் அதனையும் செய்யத் தயாராக இருப்பதாக அமைச்சர் சிறிசேன கூரே கூறியிருக்கிறார்.

இதேவேளை — தாம் நினைத்தால் ஐக்கிய தேசியக் கட்சியை உடைக்க முடியும் என்றும் — கட்சி நலன் கருதி தாம் அதனைச் செய்ய முயற்சிக்கவில்லை என்றும் திரு. கூரே இன்னொரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

## சிறிமாவோவே புதிய ஜனாதிபதி

### அரசியல் ஆய்வாளர்கள் அறிக்கை

கொழும்பு, மே 5

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே ஸ்ரீலங்காவின் அடுத்த ஜனாதிபதியாக இவ்வருடம் தெரிவு செய்யப்படுவார்.

அவரது மகள் சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராக மட்டுமே வரமுடியும்.

உலக அரசியல் ஆய்வாளர்கள் குழு 1994 ஆம் ஆண்டுக்குரிய தனது உலக அரசியல் ஆய்வறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

இவ்வருடத்தில் நடைபெறும் தேர்தலில் சந்திரிகா குமாரணதுங்கவே ஜனாதிபதியாகத் தெரிவாவார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டபோதிலும் —

சிறிமாவோ பண்டாரநாயக்காவே அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் என்று — பிரஸ்தாப ஆய்வறிக்கை கூறுகிறது.

அனைத்துலக முதலீட்டாளர்களின் கவனம் ஸ்ரீலங்காவின் பக்கம் திரும்பியுள்ள இவ்வேளையில், அவர்களுக்கு ஒரு வழிகாட்டுதலாகவே இந்த அறிக்கை அமைந்துள்ளது. தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்தே ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பதினேழு வருடங்கள் தொடர்ந்து ஆட்சிப்பீடத்தில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி



அப்ப... இனி ... கட்சியை ... போறார் போல...

### மேல் மாகாண

## முன்னாள் முதலமைச்சர் சுசிலுக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, மே 5

மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் சுசில் முனசிங்காவுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் இன்று இல்லை என்று, ... மாகாண சபைக் கூட்டத்தில் ... குப் பின்னரே இவருக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சுசில் முனசிங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளராகவும் இருந்து வருகின்றார். (எ)

### கூ.ரேயின் ஆதரவாளர்களான

## "லேக் ஹவுஸ்" தலைவரும் பத்திராதிபரும் ராஜினாமா!

கொழும்பு, மே 5

அரசக் கட்டுப்பாட்டில் இயங்கும் ''லேக்ஹவுஸ்'' பத்திரிகை நிறுவனத்தின் தலைவரான சட்டத்தரணி சுனில் றொட்றிகோவும் —

அந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் ஆங்கில வார இதழான ''ஒப்சேவர்'' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான எச் எல். மஹிந்தபாலாவும் நேற்றுக் காலை தத்தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

இவர்கள் இருவரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவினதும் அமைச்சர் சிறிசேன கூரேயினதும் நெருங்கிய ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் பதவியை சிறிசேன கூரே இராஜினாமாச் செய்ததை அடுத்து, அரசாங்க நிறுவனங்களின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எச் எல்.டி. மஹிந்தபால ''ஒப்சேவர்'' ஆசிரியராக இருந்தபோது —

ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைவராக இருந்த காமினி திஸாநாயக்காவுக்கு எதிராக — கடுமையான விமர்சனங்களுடன் கூடிய — பல கட்டுரைகள் அந்தப் பத்திரிகையில் வெளியாகியிருந்தன என்பதும்—

தற்போது காமினியை அமைச்சரவைக்குள் கொண்டுவர தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முயற்சித்து வருவதும் குறிப்பிடத்தக்கது [உ-எ-6]

## "லேக் ஹவுஸ்" தலைவராக காமினிக்கு நெருங்கியவர்!

கொழும்பு, மே 5

''லேக் ஹவுஸ்'' நிறுவனத்தின் புதிய தலைவராக — காமினி திஸநாயக்காவுக்கு மிகவும் வேண்டியவரான — சரத் அமுனுகம நியமிக்கப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

காமினியின் பழைய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் மத்திய மாகாண சபைக்கு போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது உறுப்பினராக பதவி வகித்துவரும் சரத் அமுனுகம ஒரு தேர்ச்சி பெற்ற பத்திரிகையாளராவார்.

1978 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் தகவல் ஒலிபரப்பு அமைச்சராக டி. பி. விஜேதுங்க பணியாற்றிய போது, சரத் அமுனுகம அந்த அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார்.

சரத் அமுனுகம ''லேக் ஹவுஸ்'' நிறுவன தலைவராக நியமிக்கப்படுவது, ஐ. தே. கவில் காமினியின் செல்வாக்கு அதிகரித்து வருவதையே காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர். (உ-எ-6)

## ராணுவத் தாக்குதல் திட்டம் புலிகளிடம் சிக்கிவிட்டதாம்!

கொழும்பு, மே 5

வடக்கின் மீது - யாழ்ப்பாணத்தின் மீது - நடத்தப்படவுள்ள பெரும் இராணுவத் தாக்குதலுக்கென படை உயர் அதிகாரிகள் தயாரித்த திட்டம் பற்றிய விவரங்களும், அவை சம்பந்தப்பட்ட தகவல்களும் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்து விட்டனவாம்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தாம் இரகசியமாக வகுத்த திட்டங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துவிட்டதால் இராணுவ உயர் அதிகாரிகள் கவலையும், கலவரமும் அடைந்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம உயர் இராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமே தெரிந்த தாக்குதல் திட்டங்களும், விவரங்களும் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்துவிட்டதால் எதிர்பார்த்த இராணுவத் தன நிலைமை மிகவும் மாறிப் போய் விடும் என்ற அச்சமும் படை வட்டாரங்களில் நிலவுகிறது. (அ-9)

## சீருடைக் கொள்ளையர்கள் தமிழரின் வீட்டில் சூறை!

### கந்தானையில் சம்பவம்

கொழும்பு, மே 4

இராணுவ சீருடையை ஒத்த உடை அணிந்து ஆயுதங்களுடன் வந்த மூவர் பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையிட்டனர்.

கடந்த 27 ஆம் திகதி இரவு 11-30 மணியளவில் கந்தானையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப வர்த்தகரின் வீட்டில் இருந்து பணம், நகைகள் போன்றவற்றை கொள்ளையர்கள் சூறையாடினர்.

ஐந்து லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியான பணமும் நகைகளுமே பறிபோனதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டை சோதனையிட வேண்டும் என்று முதலில் கொள்ளையர்கள் கைத்துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 5

காரைநகர் பகுதியில் இருந்து வலிகாமம் மேற்கு பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இதேவேளை —

நேற்று மாலை மண்டதீவுப் பகுதியில் இருந்து படையினர் ஏவிய இரு ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. [உ-5]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

2 போத்தல் பால் கறக்கும் யமுனாபாரி ஆடும், அதன் கடாய் குட்டியும் விற்பனைக்குண்டு. A. கனகலிங்கம், 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (30714)

தடுப்பூசி போடப்பட்ட நல்ல இன பன்றம், நல்ல இனனார்க் குஞ்சுகள், பன்றம் சேவல் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: செல்யூட் மோட்டோஸ் 382C, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி), யாழ்ப்பாணம். (30720)

Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் விடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (30739)

1½ வயது பொமரேனியன் வெள்ளை ஆண் நாயும், குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. றோய், 74/2, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [30736]

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கில் இ.போ.ச. டிப்போவுக்கு அண்மித்ததாக மனை வசதியுடன் கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு: க. கனகராசா, 525/2, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-7997)

## கார் விற்பனைக்கு

வொக்ஸ்வேகன் (Volks-wagen) ஓடக்கூடிய நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. சபா விற்பனை நிலையம், அச்சுவேலி. (30738)

## எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலையை 10-05-94க்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (இ-7992)

## மீன்தூள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் மீன்தூள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தங்கள் கூறுவிலையை 10-05-94க்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-7991)

## மணமகள் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோர், வயது 30 மிருகசீரிடம் 1 செவ்வாய் 2. B Sc, Medical Engineer. நோர்வேயில் தொழில் புரியும் மகனுக்கு A/L படித்த அழகிய பெண்ணை விரும்புகிறார்கள். Sponsor செய்து அழைக்கலாம் M Rajenthieram. (Retd. Accountant) 165 Kopay. South. Kopay. Near Navalar School) (30706)

## மணமகன் தேவை

இந்துமதம், மேடம் நட்சத்திரம் அவிட்டம்-2, வயது 34 செவ்வாய் தோஷமற்ற படித்தப்பட்ட நுண்கலை ஆசிரியைக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை. 637 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (30733)

ஆயுள்வேதம் படித்த பண்புள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, வயது 41, அனுஷம், பாவம் 17/16 பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றார்கள். ஆயுள்வேத வைத்தியரும், விரும்பத்தக்கது 638 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30734)

# "ஆதாரம்" வெளியானது

யாழ்ப்பாணம், மே.5

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான "ஆதாரம்" 12 ஆவது இதழ் பங்குனி-சித்திரை மாத வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந்த இதழில் பலவிசேட கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் வழமையான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. (க)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 96 கலை, வர்த்தக வகுப்புகள்

அடுத்த புதிய பிரிவு

## WEEKEND CLASSES
## EVENING CLASSES

**07 - 05 - 1994** சனிக்கிழமை
காலை 8-00 மணி

திறமைமிக்க எமது பட்டதாரி ஆசிரியர்குழு:

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. க கலாசரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. S K. பிரபாகரன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — திரு குழந்தை |
| வரலாறு | — திரு. சிறிதரன் |
| அரசியல் | — திரு சிவன் |
| கிறிஸ்தவம் | — திரு தனேஸ்வரன் |

★ கலை வர்த்தகத் துறையின் முன்னோடி நிறுவனம்
★ அனுபவமும் ஆளுமையும் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் சிறந்த பெறுபேறுகளை வழங்கி வரும் நிறுவனமும் இதுவே.

(சி-8061)

---

# தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்
# நூல் வெளியீடு

அன்புடையீர்!
எமது ஆதீனம் புதிதாக வெளியிட இருக்கும் இரு நூல்களான

## யாழ்ப்பாணத்து தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள்
பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்

## 'மகதலேனா மரியாள்'
(குறுங்காவியம்)
நாவேந்தன்

வெளியீட்டு நிகழ்வு
**05-05 1994 மாலை 3.00மணி**

யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(யாழ் போது மருத்துவமனை முன்பாக)
மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

★ அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். ★

அ. ஜெயக்குமாரன்
செயலாளர் தெ. இ. திருச்சபை
யாழ். ஆதீனம்.

(இ/7990)

---

# ஈராண்டு நினைவஞ்சலி

வேலணையூர் "சிவதொண்டன்"

## நாகமுத்து நாகலிங்கம்

மனிதப் பிறப்பு: 02-04 921
தெய்வப் பிறப்பு: 05-05 1992

உங்கள் ஆத்மா சாந்தியடைய குல தெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. கேதீஸ்வரன்
(மருமகன்)

"சுந்தன் கருணை",
வேலணை - 5.

(30735)

---

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 08 — 1924



உதிர்வு: 05 — 05 — 1991

## அமரர் அந்தோனி சவிரி

என்றும் எம் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் ஆன்மா நித்திய பேரின்ப பாக்கியத்தில் சேர இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

156ஆம் கட்டை,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

(30732)

---

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர் 165 / 88 — 10

வேதனம்:

1005 — 40X5 — 50X10 — 1705 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள்:

அ. க. பொ. த. 11ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவலகர் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த. 12ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவலகள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ. பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் - 1

அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர்/உள்ளகக்கணக்குப் பரிசோதகைப்பதவி ஒன்றில் நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை:

வயது 23க்கும் 40க்கும் உட்பட்டவராக இருக்க வேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

வசிப்பிடத் தகைமை:

குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பிணைப்பணம்:

கூ. வே. ஆணை குழு சட்டத்திற் கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்தல் வேண்டும்.

உள்ளடக்கப்படவேண்டியவை:

கல்வி, பிறப்பு நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதி:

**20 - 05 - 1994**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி, கிழக்கு,
கோப்பாய்.

(இ-7998)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கணக்கியல்

வார இறுதி வகுப்புகள்:
A/L - 96 — சனி, ஞாயிறு 11 - 12
A/L - 95 — சனி, ஞாயிறு 12 - 1
A/L - 94 — சனி, ஞாயிறு 1 - 3

மாலை நேர வகுப்புகள்:
A/L - 96 — திங்., வெள்ளி 5 - 6
A/L - 94 — திங்., செவ்., வியா. 3 - 5

ஆசிரியர்:
**திரு S K பிரபாகரன்** B. B. A.

★ அனைத்து அலகுகளும் கடந்த கால வினா-விடைகளுடன் கற்பிக்கப்படும்
★ மாதாந்தப் பரீட்சைகள் நடத்தப்படும்.

(சி-8064)

---

# கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு
**G C E. A/L 96**

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்: **07-05-1994**
சனி காலை 8 மணி

குறிப்பு:
குறிக்கப்பட்ட அனுமதிகள் மட்டுமே வழங்கப்பட இருப்பதனால் முற்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

- நிர்வாகி.

(சி-8073)

---

# யாழ். மாவட்டத்தில் இன்று 18 பேருக்கு அரச நியமனம்

யாழ்ப்பாணம், மே 5

1993 ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 18 பேர் பல பதவிகளுக்கு இன்று நியமனம் பெறவிருக்கின்றனர்.

நியமனம் பெறுவோர் தமது நியமனக் கடிதங்களை இன்று யாழ். செயலக நிர்வாக உத்தியோகஸ்தரிடம் இருந்து பெற்று, ஒதுக்கப்பட்டுள்ள திணைக்களங்களில் பதவியை பொறுப்பேற்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

ஆர். பத்மராஜன் (புலோலி). ஆர். பத்மாவதி (யாழ்ப்பாணம்), பி. கமலகுமாரி [முளாய்], பி. தயாளினி (சுன்னாகம்) ஆகியோர் எழுதுவினைஞர்களாகவும் —

செல்வி பி. டேவிட் [சுன்னாகம்] கணக்குப் பதியுநராகவும் —

எஸ். என். கேதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), ஆர். சிவதேசி (குரும்பசிட்டி), கே. சிவநிதி (வரெழு வடக்கு) ஆகியோர் சிறாப்பர்களாகவும் —

ரீ. கணேசமூர்த்தி (கரணவாய் கிழக்கு), திருமதி ஜி. காந்தராசா (சண்டிலிப்பாய்) ஆகியோர் தமிழ் தட்டெழுத்தாளர்களாகவும் —

செல்வி எஸ் ஜீவரத்தினம் [திருநெல்வேலி], செல்வி எஸ். பத்மநாதன் [கோண்டாவில் கிழக்கு], செல்வி ஆர். நாகராஜா [யாழ்ப்பாணம்], செல்வி ஜே. நமசிவாயம் [கொக்குவில் கிழக்கு], செல்வி எஸ். ராஜரத்தினம் [குரும்பசிட்டி] ஆகியோர் ஆங்கில தட்டெழுத்தாளர்களாகவும் —

எம். திருநாவுக்கரசு [யாழ்ப்பாணம்], ஏ சிவஞானபிரகாசம் [ஏரவெட்டி], வி திருப்பதிநாதன் [நவாலி வடக்கு] ஆகியோர் சிற்றூழியர்களாகவும் நியமனம் பெறுபவர்களாவர். (எ-3)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வடமராட்சி தெ. மே. பிரதேச செயலரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. செ ஸ்ரீநிவாசன் "அருணகிரி கண்ட குமரவேள்" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு. சு. சண்முகசுந்தரம் அறிமுகவுரை ஆற்றுவார். (ஊ)

★ ★ ★

அராலி, மே 5

அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் சுகாதார வார இறுதிநாள் விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

சுகாதார கல்வி பற்றிய கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும். (க-12)

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ந: சிவசோதி தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் [த-117]

---

# உபநயன அழைப்பு

நிகழும் பவ வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் நாள் (6 5-94) வெள்ளிக்கிழமை ஏகாதசி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகம் குரு கால ஹோரையோடு கூடிய 9 மணிக்கு மேல் 10-15க்குள் வரும் மிதுனலக்ன சுபமுகூர்த்தத்தில்.

எனது புத்திரர்கள்

## பிரம்ம ஸ்ரீ பிரசன்னா சர்மா
## பிரம்ம ஸ்ரீ பிரசாத் சர்மா

ஆகியோருக்கு பிரமோபதேச யக்ஞோபவீத தாரணம் செய்ய கும்பளாவளைப் பிள்ளையார் திருவருள் கூடியுள்ளது.

அன்புடன் அழைக்கிறோம்

இங்கனம்:-
பிரம்மஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக் குருக்கள்
தம்பதிகள்
(சந்திரன், ஜானகி)

கும்பழாவளை,
அளவெட்டி.

(30744)

---

# இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களுக்கு

1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 15-05-1994 இற்கு முன்னர் தம்மைப் பதிவுசெய்திருக்க வேண்டும். பதிவுசெய்வோர்


இல· 140. பலாலி வீதி திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும்.

(30737)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 07 — 02 — 1934



உதிர்வு: 05 — 04 — 1994

## அமரர் சின்னத்தம்பி நாகராஜா

அன்பும் பாசமுமுள்ள அப்பா! நீங்கள் அன்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எல்லோருடனும் அன்பாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே! எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்து மாதம் ஒன்றானாலும் உங்கள் நினைவுகள் நீங்கிடாது என்றென்றும் எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் 5-5 94 இல் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

17, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(30742)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## சன்னதம் கலைந்ததோ!

இனப்பிரச்சினை தொடர்பாக, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா திடீரென ஒரு சுழி போட்டு — வட்டம் போட்டு - வளர்ந்தை மாற்றி — வலம் வந்திருக்கிறார்!

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு, இவ்வருட இறுதிக்குள் சமுகமான தீர்வு காணப்படும். இதற்காக அமைதியாக ஆரவாரமின்றி முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன் — என்று கண்டியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மாநாட்டில் பேசுகையில் அவர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் குடாநாட்டின் மீது பெரும் இராணுவத் தாக்குதலை இந்த மாதத்தில் நடத்துவதற்குப் படையினருக்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கிவிட்டதாகச் செய்தி வெளியாகிய ஒரு வாரத்தில், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணப்போவதாக அவர் தமது நிலைப்பாட்டை மாற்றி உள்ளார்.

அது மட்டுமா?

தமிழர்கள், சிங்களவர்கள் முஸ்லிம்கள், பறங்கியர்கள் ஆகிய எந்த இனத்தவராக இருப்பினும், இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் எனக்குள்ள பொறுப்பினை நான் நன்கு உணர்வேன். அனைவரும் சமமானவர்கள். அவர்கள் ஒருவருக்கு மற்றவர் தாழ்ந்தவர்கள் அல்லர் — என்றும் அவர் தமது புதிய நிலைப்பாட்டை அகில இலங்கை முஸ்லிம் லீக் மாநாட்டிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கு விவகாரம் இனப்பிரச்சினை அல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினை. அதனை இராணுவத்தீர்வு மூலமே முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளார் என்றும் —

சிங்களவர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர். அவர்கள் பெரு விருட்சம். தமிழர் முஸ்லிம்கள், பறங்கியர் போன்ற சிறுபான்மையினர் அந்த விருட்சத்தை நம்பிப் படரும் கொடிகள் போன்றவர்கள் என்றும் —

இவற்றையும் விஞ்சி கடும் தீவிரவாதியாகவும், இனத்துவேசியாகவும் பேசிக்கொண்டு, தமிழர்களின் வாக்குகளுக்குக் கெஞ்சிக்கொண்டிருக்காமல் சிங்களவர்களின் வாக்குகளிலேயே தாம் ஜனாதிபதியாகத் தெரிவாக விரும்புவதாகவும் கூறியவர் டி. பி.

தலைகீழாக நின்ற அவர் தமது நிலைப்பாட்டை வலம் மாற்றி இப்போது சரியான உருவத்துக்கு வந்திருப்பதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்தது தான்! சோழியன் குடுமி சும்மாவா ஆடும்? தாம் மீண்டும் ஜனாதிபதியாவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் பதவியைப் பிடிப்பதற்குமே இந்த மாற்றம்.

மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற தென்மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளும், தமது கட்சிக்குள்ளேயே உண்டான அதிகாரப் போட்டி, உட்பூசல் என்பனவும் சன்னதம் ஆடிய விஜேதுங்காவின் 'உரு'வைக் கலைத்து விட்டன; அவர் இப்போது சுய உணர்வு வந்தும் களைத்துப் போய் விழுந்திருக்கிறார். எழுந்து நிற்பதற்கு சிறுபான்மையினர் ஆதரவு என்ற சக்தி தேவைப்படுகிறது.

அவர் தமது முந்திய நிலைப்பாட்டை மாற்றுவதற்கு மனம் கொண்டிருப்பது உண்மையானால், வடக்கு - கிழக்கில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழீழப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தையும் வாபஸ் பெற வேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலை தோன்றினால் மட்டுமே, அவர் கூறும் சுமுகமான தீர்வுக்கு வழிகோல முடியும். செய்வாரா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முந்தி கொண்டு, தமிழர்களின் அபிலாசைகளை நெருங்கக்கூடிய, நியாயமான, அவர்கள் ஏற்கக்கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்து நடைமுறைப் படுத்தினால் மட்டுமே அவர் தமிழர்களின் ஆதரவைப் பெறமுடியும்.

சிங்களத் தலைவர்களின் வெறும் வாய்ப்பேச்சையும், வாக்குறுதியையும் நம்பி ஏமாறும் நிலையில் தமிழர்கள் இல்லை என்பதையும் அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

---

நாடு சீரழிவதற்கு முன்பு

# அரசாங்கத்தைக் கலைத்து உடனே தேர்தலை நடத்துக!

## பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு, மே 5

அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள உட்கட்சி மோதலால் நாடு சீரழிவதற்கு முன்னர் அரசைக் கலைத்து விட்டு ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தும்படி பொது மக்கள் ஐக்கிய முன்னணி கோரியுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி விடுத்துள்ள பகிரங்க அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள இரண்டு பெரிய அணிகள் அதிகாரத்தைக் கைப்பற்றும் கடும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. இந்தப் போட்டியில் தோற்பவர்களின் தலைகள் உருவப் போவதை நாடு விரைவில் காணப்போகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் மூடப்பட்ட கதவுகளின் பின்னால் இதுவரை நடந்துவந்த உட்கட்சி மோதல்கள் இப்போது வீதிக்கு வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அலை, தென் மாகாணசபைத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஈட்டிய வெற்றியை அடுத்து நாட்டில் பரவ ஆரம்பித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்கள் நொருங்கி விழ ஆரம்பித்துள்ளன.

ஐ. தே. க. உட்பூசல் இப்போது பிராந்தியங்களுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது. மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ஹாரிசன் கொனை இன்னொரு உறுப்பினரான மொஹான் வீரக்கோனை கொலை எடுத்துவரும் முயற்சி மத்திய மாகாண சபையில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளது ஆகியன எல்லாம் இதனை நிரூபிக்கின்றன. நுவரெலியாவில் மாநகர சபையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் இரு பிரிவுகளுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் நிர்வாகம் செயலிழந்துள்ளது. அரசாங்கம் மெதுவாக செயலிழக்கும் கட்டத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

நாட்டின் நிர்வாகம்செயலிழப்பதற்கு முன்பும் — நாடு ஸ்திரமின்மை நிலையை அடைவதற்கு முன்பும் ஜனாதிபதி அரசாங்கத்தைக் கலைத்து விட்டு ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத்தேர்தலையும் உடனடியாக நடத்தும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கோருகிறது —

— இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## படையினர், நிபுணர்கள் சு.கவில் சேர முண்டியடிப்பு

கொழும்பு, மே 5

சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொள்வதற்கு தொழில்சார் நிபுணர்களும் ஆயுதப்படையைச் சேர்ந்தவர்களும் முண்டியடித்துக் கொண்டுநிற்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு நியமனம் கோரி ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்திருப்பதாகவும் —

இதனால் மாவட்ட ரீதியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சுதந்திரக்கட்சித் தலைமைப்பீடத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜினாமாவை நேரில் ஏற்றார்!

## தேவையானால் உங்களின் சேவையைப் பெறுவேன்!

### கூரேயிடம் டி. பி. தெரிவிப்பு

கொழும்பு, மே. 5

"தேவை ஏற்படும் போது உங்களின் சேவையை ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைப் பீடம் நிச்சயமாகப் பெற்றுக் கொள்ளும்" என்று ஜனாதிபதி விஜேதுங்கா, அமைச்சர் சிறிசேன கூரேயிடம் நேரில் தெரிவித்தார்.

மே தினமன்று பிரேமதாஸாவின் உருவச்சிலை திரை நீக்கத்தில் கலந்து கொண்ட பின்னர், அமைச்சர் கூரே நேராக ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஐ. தே. க. பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாகத் தெரிவிக்கும் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்தார். அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட பின்னரே திரு. கூரேயிடம் ஜனாதிபதி முன் கண்டவாறு கூறினார் என்று "லங்காதீப" பத்திரிகைச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இருவரும் மிகவும் இனிமையாக அப்போது பேசிக்கொண்டனர் என்றும் —

தமது வேண்டுகோளுக்கு இணங்க பதவியை ராஜினாமாச் செய்வதற்கு விஜேதுங்கா கூரேக்கு நன்றி தெரிவித்தார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

கட்சி விரோத செயலுக்காக

## 2 அமைச்சர்கள், 7 எம்.பிக்கள் பதவி விலக டி.பி. பணிப்பு

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு, மே 5

ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்களையும் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகும்படி ஜனாதிபதி விஜேதுங்கா உத்தரவிட்டிருக்கிறார்.

கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி திவயின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடத்துக்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற காரணத்துக்காக இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் —

அதற்கு முன்னோடியாக அவர்களைப் பதவி விலகும்படி ஜனாதிபதி பணித்திருக்கிறார் என்றும் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## புலிகளின் குரல் வானொலியில்

05 – 05 – 1994
வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்.
- ★ 8-10 — உரை - உலகப் பெண்ணினம்.
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் "ஏழைகளின் பசு சித்திரம்"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — புதிய தமிழ் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி.
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்.

06 – 05 – 1994
வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கானங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தொடர்ந்து — விடுதலை கானங்கள்

நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று

## அரச பிரமுகர்கள் வெளிநாடு செல்ல அனுமதித்தது ஏன்?

### ஆளும் கட்சியில் அதிருப்தி

கொழும்பு, மே 5

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் தருணத்தில் அமைச்சர்கள் மற்றும் அரச எம். பிக்கள் சிலரை வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா அனுமதித்திருப்பது ஆளுங்கட்சி வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராகக்கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது.

இதேவேளை —

கடந்த வாரம் இறுதிவரை நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்படும்போது, விஜேதுங்கா தலைமையிலான நிர்வாகத்தை ஆதரித்துப் பேசவேண்டிய அரச எம். பிக்கள், அமைச்சர்கள் யார் என்பதை அரசுத் தலைமைப்பீடம் முடிவுசெய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பல்கலைக்கழக ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், மே 5

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ள சகல மாணவர்களையும், கல்வி இணைப்பாளர்களையும் இவ் வகுப்புக்களுக்குச் சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை தியாகராசா கேட்டுள்ளார். (எ-3)

இந்தோனேஷியாவில் இருந்து திரும்பிய கையோடு

## கூரே - லக்கி அல்கம சந்திப்பு அதன் பின்பே சதிக் குற்றச்சாட்டு

இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம அமைச்சர் சிறிசேன கூரேயை கடந்த வாரம் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் சிறிசேனகூரே இந்தோனேஷியப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியதும் இச் சந்திப்பு இடம்பெற்றதாக 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இது பற்றி கருத்து வெளியிட்ட அமைச்சர் கூரே, இராணுவத்துக்கு காணித்துண்டு ஒன்று வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கவே மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தம்மைச் சந்தித்தார் என்று கூறினார்.

இச்சந்திப்பை அடிப்படையாக வைத்தே ஜனாதிபதி விஜேதுங்காவைக் கவிழ்க்கும் சதியில் தாமும் மேஜர் ஜெனரல் அல்கமவும் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டதாகவும் அமைச்சர் கூரே தெரிவித்தார்.

தம்மையே ஐ. தே. கட்சியில் இருந்துவெளியேற்ற சதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

திரு. கூரே கடந்த வெள்ளிக்கிழமை தமது 63ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். (எ)

## மகளிர் விவகார அமைச்சு ஹேமா பிரேமதாஸாவுக்கு

கொழும்பு, மே 5

ஹேமா பிரேமதாஸாவை மகளிர் விவகார அமைச்சராக நியமிப்பது பற்றி அரசுத் தலைமைப்பீடம் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை திருமதி ஹேமா பிரேமதாஸா ஏற்பாரா என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது மகளிர் விவகார அமைச்சராகவும், சுகாதார அமைச்சராகவும் இருப்பவர் திருமதி ரேணுகா ஹேரத் ஆவார்.

விரைவில் நடைபெறவிருக்கும் தேர்தல் வரை மட்டுமே ஹேமாவுக்கு தனது அமைச்சுக்களில் ஒன்றை ரேணுகா விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும் என ரேணுகா ஹேரத் தரப்பில் சமாதானம் கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

ஒவ்வொரு மாகாணத்துக்கும்

## தேர்தல்களுக்கு பொறுப்பாக அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, மே 5

தேர்தல் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு மாகாணத்துக்கும் பொறுப்பாக அமைச்சர்களை ஜனாதிபதி விஜேதுங்கா நியமித்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு மற்றும் தென் மாகாணங்களுக்குப் பொறுப்பாக அமைச்சர் எவரும் நியமிக்கப்படவில்லை.

பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் விவரம் வருமாறு: சாகுல் ஹமீது (மத்தியமாகாணம்), சந்திரா பண்டார (வடமத்தி), டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார (ஊவா), விஜேபால மெண்டிஸ் (மேற்கு), பி. தயாரத்னா (கிழக்கு), பெஸ்டஸ் பெரேரா (வடமேற்கு), நந்தா மத்தியூ (சப்ரகமுவா).

அமைச்சர்கள் தம்மை விட்டுப் பிரிந்து போகாதபடி பார்த்துக் கொள்ளுமுகமாகவே ஜனாதிபதி இந்த நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கலீல் விலகுவார்?

கொழும்பு, மே 5

ஐக்கிய தேசியக் கட்சியின் அவைத் தலைவர் பதவியில் இருந்து டாக்டர் எம். சி. எம் கலீல் விலக இருக்கிறார் எனத் தெரிகின்றது. என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-எ)

புலிகள், பா. ம. கவுடன் சேர்ந்து

## ஜெயலலிதாவைக் கொல்ல இந்திரா காங்கிரஸ் சதி!

### அ.தி.மு.க. அமைச்சர் குற்றச்சாட்டு

மதுரை, மே 5

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து இந்திரா காங்கிரஸ் சதி செய்வதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. அரசில் தகவல் அமைச்சராக இருக்கும் எம். தென்னவன் இக்குற்றச் சாட்டை சுமத்தியுள்ளார்.

அ. தி. மு. க. தலைவரான முதலமைச்சரை வீழ்த்த மேற்கொள்ளப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார சதி முயற்சிகள் எல்லாம் தோற்றுபோன இந்திரா காங்கிரஸ், செல்வி ஜெயலலிதாவையே கொல்ல இப்போது திட்டமிட்டு வருகிறது. பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் மூலமாக விடுதலைப் புலிகளுடன் இந்திரா காங்கிரஸார் இரகசியப் பேச்சுவார்த்தை களை நடத்தி வருகின்றனர் என்று அமைச்சர் தென்னவன் குறிப்பிட்டார். (உ-எ)

ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்து குமார் கருத்து

# சிங்களக் கட்சிகளின் கெஞ்சும் தந்திரத்துக்கு தமிழர் பலியாகி விடக்கூடாது

தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சிறுபான்மையினரின் ஆதரவைப்பெற்றுக் கொள்வதற்கு கடைப்பிடிக்கும் 'கெஞ்சும் தந்திரோபாயத்துக்கு' தமிழர்கள் பலியாகி விடக்கூடாது

இவ்வாறு இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் 'சண்டே ஐலண்ட்' வார இதழில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

'சிறுபான்மையினரைக் கெஞ்சுதல்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சிறுபான்மையினரைக் கெஞ்சுதல் என்பது ஒரு கலையாகி விட்டது அடுத்தது இது இலங்கையில் மட்டுமே உள்ளது. இரண்டாவது இது ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்து ஆரம்பிக்கப்படுகிறது. மூன்றாவது இது சிங்கள அரசியல் தலைமைத்துவத்தின் கண்களுக்கு முட்டாள்களாகத் தென்படும் தமிழர், முஸ்லிம்கள் மீது தான் பிரயோகிக்கப்படுகிறது.

நிறைவேறாத உறுதிமொழிகள்

நான்காவது இந்த "கெஞ்சும் தந்திரோபாயத்தின்' போது வழங்கப்படும் எவ்விதமான உறுதிமொழிகளும் தேர்தல் காலத்தில் மட்டுமே செல்லுபடியாகும்; வாக்களிப்பு தினத்துக்கு மறு நாளில் இருந்து இவ்வுறுதிமொழிகள் செல்லுபடியாகும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

இறுதியாக- பாரம்பரியமாக கெஞ்சுதல் உத்தியைக் கையாண்டு வரும் ஐ. தே. க., சு. க. ஆகிய கட்சிகளுக்கு மட்டுமே இந்த உத்தி சொந்தமானது.

இந்தக் 'கெஞ்சல் உத்தி' இப்போது ஆரம்பமாகி விட்டது. இதன் அடையாளமாக தொண்டா-விஜேதுங்கா சந்திப்பு கடந்த மாதம் 8ஆம் திகதி இடம் பெற்றது. இருவரும் வாராந்திர அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டாலும், பதினொரு மாதங்களின் பின்னரே இருவரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசிக் கொண்டனர். அந்த தினம் 'மிகப் பெரிய சரணாகதி தினமாக' சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

ஒரு கல்லில் இரு பறவைகள்

விஜேதுங்கா- தொண்டா சந்திப்பு ஒரு கல்லில் இரு பறவைகளை வீழ்த்தி விட்டது.

காமினி ஜயசூரியாவின் சிங்கள பாதுகாப்புச் சங்கமும் சுதந்திரக் கட்சியில் உள்ள ஹெல உறுமய அணி ஆகியனவே அப்பறவைகளாகும்.

இந்த 'கெஞ்சுதல் உத்தி'க்கு தமிழர் பலியாகி விடக்கூடாது கெஞ்சி வரும் ஐக்கிய தேசியக் கட்சியையும் தமிழர்கள் தவிர்க்க வேண்டும் காலம் பிந்தியாவது தமிழர்கள் தங்கள் சுய கௌரவம், பெருமையை மீட்டு எடுத்து பாதுகாக்க இதுவே ஒரே வழியாகும்.

தேர்தல் காலத்தில் கொடுக்கும் உறுதி மொழிகளைக் காப்பாற்றுவதில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் நேர்மையாக கடந்த காலங்களில் நடந்து கொள்ளவில்லை. இவ்விரு கட்சிகளையும் குறிப்பாக தேர்தல் காலத்தில் தமிழர்கள் நம்பக் கூடாது.

கடந்த காலங்களில் தமிழருக்கு ஒன்றுமே செய்யாது இருந்து விட்டு தேர்தல் காலத்தில் மட்டும் தமிழர்களை [illegible] வது ஆபாச அரசியலாகும்.

திரும்ப திரும்ப தமிழர் விழுந்து விடக் கூடாது. நாம் விழித்துக் கொள்ள வேண்டும் ஒவ்வொரு அரங்கிலும் தமிழர்கள் தங்கள் அபிலாஷைகளைத் தெரிவித்து விட்டார்கள். எழுத்தில் தமிழர் தம் நிலைப்பாட்டைத் தெரிவித்து விட்டனர். தமிழர் ஐக்கியப்படவில்லை என்று இனியும் கூறமுடியாது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் தமிழர் ஐக்கியமாகத் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்து விட்டனர். இதற்கு மேலாக தமிழரினால் ஒன்றுமே செய்ய முடியாது.

தமிழரின் அபிலாஷைகள் பற்றி தங்களுக்குத் தெரியாது என்று சிங்கள அரசியல் தலைமைத்துவம் கூறமுடியாது தமிழரின் நிலைப்பாடு பற்றி இவ்விரு கட்சிகளுக்கும் நன்றாகத் தெரியும். ஐக்கியமாக முன்வைத்துள்ள கோரிக்கைகளில் இருந்து எந்த தமிழனும் பின்னோக்கிச் செல்ல முடியாது. ஆகவே தமிழருடன் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இரகசியப் பேச்சுக்களை நடத்துவதில் பிரயோசனமில்லை. இவ்விரு கட்சியினரும் சிறுபான்மை இனங்களைத் தனித் தனியாக சந்திப்பது பலனளிக்காது.

பொது நிலைப்பாடு

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொது நிலைப்பாடு ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் பரஸ்பரம் தங்களுக்குள்ளே ஆதரவைத் தேடிக் கொள்வதே இப்போதுள்ள ஒரே வழியாகும்.

தமிழர் இப்போது கேட்பது சலுகைகளை அல்ல. அவர்களுக்கு உரிமைகள் தான் தேவை.

தமிழரின் அபிலாஷைகளை இவ்விரு கட்சிகளும் நிறைவேற்றிய பின்னரே தமிழர்கள் இக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பார்கள் அதுவரை தமிழர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டும். யு.என்.பியையோ சுதந்திரக் கட்சியையோ தமிழர் ஆதரிக்கக் கூடாது.

— இவ்வாறு குமார் பொன்னம்பலம் கட்டுரையில் தெரிவித்துள்ளார் (எ)

## வேளாண் மன்னர் தெரிவு

யாழ்ப்பாணம். மே 5

வட தமிழீழத்தின் ஆறு மாவட்டங்களிலும் 'வேளாண் மன்னர்'கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மாவட்ட ரீதியாக நடத்திய போட்டியில் அதிகூடிய அளவு நெல் விளைச்சலைப் பெற்று வெற்றியீட்டிய விவசாயிகளே 'வேளாண் மன்னர்' பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட உள்ளனர் (அ)

**வன வளம இல்லையேல் மழை வளம் இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் கொள்ளையில் ஈடுபட்ட தப்பி ஓடிய சிப்பாய் கைது

8 வட்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்றைக் கொள்ளை அடித்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய சிப்பாய் ஒருவர் வரக்காப்பொளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இம்புலானையில் கிறிஸ் சுந்தியின் முனையில் காரைத் திருடிய சந்தேக நபர் அதில் திவரக்காப்பொளைப் பொலிஸ் பகுதிக்குத் தப்பிச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காருடன் சந்தேக நபரை ஹற்றொவ என்ற இடத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்தனர். (ஒ-எ)


## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு லிஸ்டர் அல்லது யன்மார் என்ஜின் (15 H.P. இலிருந்து 30 H. P. வரை) தேவை. விலை விபரங்களுடன் அறிவிக்கவும்,

விளம்பர இல. 639
C/O உதயன்
யாழ்ப்பாணம்

(30746)


## மரண அறிவித்தல்கள்

### இராஜதுரை செல்வநாயகம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கட்டுடை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை செல்வநாயகம் நேற்று (04-05-94) காலமானார்.

அன்னார் பிறேமலாவின் அன்புக் கணவரும், கிருசாந்தியின் அன்புத் தந்தையும், நிமலனின் (கனடா) அன்பு மாமனாரும், திருமதி விஜயா தளையசிங்கத்தின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05-05-94) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி விஜயா தளையசிங்கம்.

கட்டுடை,
மானிப்பாய் மேற்கு. (30741)

### சபாரத்தினம் சபாலிங்கம் T. A.

சபாரத்தினம் சபாலிங்கம் 01 - 05 - 1994 அன்று பிரான்சில் அகால மரணமானார். அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ச. சபாரத்தினம், திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் தம்பதியின் அன்பு மகனும், திருமதி சுபாநிதி (கோமதி)யின் அன்புக் கணவரும், சஜாசேயோனின் தந்தையும், சபாநந்தன் (ACMA Financial controler Retures), சபானாதன் [MBBS, DM, FRCS (Edin) FRCS (Eng.), FICA], சபாநேசன் [MSC Civilengineer], சபாஈசன் [A. A. T], சபாநிரஞ்சன், திருமதி கௌரி சற்குணானந்தன், திருமதி வானதி இரத்தினமோகன், திருமதி சுமதி வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி
(தாயார்)

அச்சுக்கூட ஒழுங்கை,
தலைபாழி,
கொக்குவில் கிழக்கு. (7364)

### கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்

(சமாதான நீதிவான் - உரிமையாளர், குகன் மரக்காலை)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகக் கொண்டவரும் குகன் மரக்காலை உரிமையாளரும், சமாதான நீதிவானுமாகிய கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் நேற்று புதன்கிழமை (04-05-94) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை — நாகமுத்து தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் — பூரணம் அவர்களின் மருமகனும் சிவக்கொழுந்துவின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற யாகம்மா, அமிர்தம், தர்மலிங்கம், நமசிவாயம், வள்ளியம்மை, சபாபதி ஆகியோரின் அன்பு சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 05-05-94) பி.ப. 4 மணிக்கு கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
த. நடேசு
[மகன்]

485, நாவலர் றோட்,
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம். (30745)

## OBITUARY

### SWAMPILLAI ANTON

Swampillai Anton Formerly Nestle's beloved Son of late Alfred Swampillai (Proctor S. C J P U. M.) and late Rose Swampillai Dearly beloved Husband of Maureen Precious Father of Dushan, Niloo and Viresh Father - in - law of Roshi loved Brother of Rukmani Allegakoen late Leela Thuraisingham late Grace Selvadurai Joyce Pillainayagam and Rita Kunaratnam Son in - law of late Cecil Rajakarier and of Saras Rajakarier of Sydney Passed Away Peacefully on 23rd April. Funeral took Place on Wednesday the 27th April 1994 at Sydney - Australia.

Friends and Relations Please Accept this Intimation.

SUREN A. E CHRISTOPHER.
(Nephew)

No 52, B Vembadi Road,
Jaffna. [30740]

### ஆலயங்களில்

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் (சிவன்) கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அலங்கார திருவிழாவும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வருடாந்த திருவிளக்கு வைப்புப் பூசையும் நடைபெறும். (க)

### இன்று

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் பொது நூலகர் வட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ள அறிவியல் அரங்கு இன்று காலை 10 மணிக்கு மேற்படி நூலக மண்டபத்தில் நடைபெறும்.

"விவசாயத்தின் நவீன தொழில் நுட்பங்களும், ஒன்றிணைந்த பயிர்ப் பாதுகாப்பும்" என்ற தலைப்பில் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. அ. சின்னத்துரையும், விவசாயப் பகுதி உத்தியோகத்தர்களும் கருத்துரை வழங்குவர். [த-28]

★ ★ ★

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சைவத்திருமுறை விழா இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கலாசாலை இரதி லக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் உரையரங்கு, இசையரங்கு, நாடக அரங்கு ஆகியவை இடம்பெறும். (த)

### கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், மே 5

இன்று கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்களை இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் நண்பகல் 12 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார். (த)

### முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மே 5

யாழ். செயலகத்தில் இன்றும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின் யாழ். மாநகரசபை பகுதியில் உள்ள — இதுவரை முத்திரையிட்டுக் கொள்ளாத — வர்த்தகர்கள், வியாபாரிகள் மீது திடீர் சோதனை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செயலக நிறுத்தல் அளவைகள் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த-162)

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

மென்பந்து கிரிக்கெட்
பிற்பகல் 3மணி; பேசும் மீன் வி.க எதிர் வெற்றி வி.க
கரப்பந்தாட்டம் (ஓவர்)
★ பிற்பகல் 3.00 மணி; காந்திஜி வி. க. எதிர் வளர்மதி வி.க (த)
கரப்பந்தாட்டம் (வெற்றப்)
★ 4 மணி; ஐங்கரன் வி.க. எதிர் நவோதயா வி.க

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான போட்டிகளும் அரை இறுதிப் போட்டிகளும் இன்றும், நாளை மறுதினமும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிகள் இம் மாதம் 9ஆம் திகதி நடைபெறும். (த-152)

### வை.கோ. அணியில் எஸ். எஸ். சந்திரன்

சென்னை, மே 5

வை. கோபாலசாமி தலைமையிலான தி.மு.கவில் பிரபல நகைச்சுவை நடிகர் எஸ். எஸ் சந்திரன் சேர்ந்துள்ளார்.

இது சம்பந்தமான நிகழ்ச்சி திரு. கோபாலசாமி முன்னிலையில் நடந்தது. திரைப்படத் தயாரிப்பாளர் தாணு, நடிகர் ராதாரவி ஆகியோரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். (உ-எ)

## ராணுவத்தினரின் தாக்குதல்களால்
# வடக்கில் 3 ஆண்டில் 1,000 சிறுவர்கள் பலி

யாழ்ப்பாணம், மே. 4

வடபகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஆயிரம் சிறுவர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இருந்து வெளியாகும் "தமிழ் நேஷன்" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டது.

இக்காலகட்டத்தில் மொத்தமாக மூவாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் அவர்களில் ஆயிரம் பேர் வரை விமானக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## நான் இழப்பதற்கு ஒன்றுமேயில்லை
# ஐ. தே.க, தோல்வியுற்றால் அமைச்சர்களுக்கே கஷ்டம்!
### ஒளிவு மறைவின்றி டி.பி. பேச்சு

"நான் இழப்பதற்கு ஒன்றுமே இல்லை, எனது கைகள் சுத்தமாக உள்ளன. அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்தால் அமைச்சர்கள் தான் கஷ்டப்படவேண்டி இருக்கும்"

ஜனாதிபதி விஜேதுங்கா கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர்கள் மத்தியில் பேசிய போது முன்கண்டவாறு ஒளிவு மறைவின்றி தெரிவித்தார்.

ஆகவே அமைச்சர்கள் தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர்த்துக் கொண்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியீட்ட வைக்க பாடுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டார். (உ-எ)

## நாடு திரும்பிய
# மகன் அனுரா சிறிமாவிடம் சுகம் விசாரிக்க செல்வார்

கொழும்பு, மே 5

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்த உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பினார்.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் சுகமடைந்து வரும் தமது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்த பின்னர் அனுரா ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# மகாபொல பரிசளிப்பு சனிக்கிழமை நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 5

1992/93 ஆம் ஆண்டிற்கான மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். அரச அதிபர் தலைமையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் தமது அடையாள அட்டை அல்லது பல்கலைக்கழக பதிவு அட்டையுடன் அன்று காலை 8 மணிக்கும், அவர்களின் பெற்றோர்கள் காலை 9 மணிக்கும் சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட சகல பீடாதிபதிகள் துறைத் தலைவர்கள், யாழ். கல்வி வலயப் பணிப்பாளர்கள், உயர்தர வகுப்பு பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலர்கள், உள்ளூர் திணைக்களத் தலைவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

பரிசு பெறும் மாணவர்களுக்கான அழைப்பிதழ்களையும், கொடுப்பனவு பற்றிய விவரமடங்கிய பத்திரங்களையும் யாழ். பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

## ராஜதந்திரிகளாகப் பணிபுரியும்
# பிரமுகர்களின் பிள்ளைகள் சேவை நீடிப்பு பெறுகின்றனர்

கொழும்பு, மே 5

பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும் திரு. அசோக வீரக்கோனுக்கு சேவை நீடிப்பு வழங்கியது கொழும்பு வெளிநாட்டமைச்சில் உள்ள இராஜதந்திரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அசோக வீரக்கோன், ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகராக இருக்கும் பிரட்மன் வீரக்கோனின் புதல்வரும் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினாவின் மருமகனும் ஆவார்.

இது போன்று அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும், ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவின் புதல்வர் அசோக ரணசிங்கா —

கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரியும், ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமியின் மகன் ஆகியோருக்கும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# சித்திபெறத் தவறியோருக்கு விசேட கணிதபாட வகுப்பு
### நேற்று முதல் இணுவில் இந்துவில்

ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் கணிதபாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவருக்கு உதவி, அவர்களைச் சித்தியடையச் செய்யும் நோக்குடன் —

யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் விசேட கணித வகுப்புகளை இலவசமாக நடத்தி வருகிறது.

இணுவில் இந்துக் கல்லூரியில் இந்த விசேட கணித வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின.

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இவ் வகுப்புகளில் பங்குபற்றி பயனடைய விரும்பும் மாணவர்கள் இணுவில் இந்துக் கல்லூரி அதிபரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இணுவிலிலும் அதன் அயல் கிராமங்களிலும் உள்ள கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் இவ்வகுப்புகளில் பங்குபற்றலாம் என்று விஞ்ஞானத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார்.

## நிவாரண திட்டங்களால்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் — என்ற திட்டத்தையும் மீண்டும் ஆரம்பிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் எண்ணாயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க சேவையில் வாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## தமிழகத்தில்
# இந்திரா காங்கிரஸை பிளந்து ராஜீவ் காங்கிரஸ் உருவாகும்
### அ. தி. மு. க. தீவிர முயற்சி

சென்னை, மே. 5

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏக்களில் ஒரு பகுதியினரைப் பிரித்தெடுத்து ராஜீவ் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்க அ. தி. மு. கவினர் முயற்சித்து வருவதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் காங்கிரஸ் என்ற பெயரில் உருவாகும் புதிய கட்சியில் தற்போதைய காங்கிரஸ் எம்.எல். ஏக்களில் 25 பேர் சேர்ந்துகொள்வர் என்று கூறப்படுகிறது.

இவர்களில் ஆறு பேர் எம்.எல்.ஏ. சிங்காரம் தலைமையில் பகிரங்கமாக — காங்கிரஸுக்கு எதிராக — அ.தி.மு.கவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

ராஜீவ் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு கட்சியைத் தமது நிழலில் வளர்த்து அதனுடன் தேர்தல் உடன்பாடு காண ஆளும் அ.தி.மு.க தீவிரமாகச் சிந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அ.தி.மு.க. அரசை மத்திய அரசு கலைத்தால் ராஜீவ் காங்கிரஸ் உடனடியாக அமைக்கப்பட்டு விடும் என்று சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## இலங்கைத் தூதராக
# திலகரத்ன புதுடில்லியில் பதவி ஏற்பது தாமதமாகும்!

கொழும்பு, மே 5

இலங்கை வெளியுறவுச் செயலாளராக இருக்கும் திரு. பேர்னாட் திலகரத்னா இம் மாதம் புதுடில்லியில் இலங்கைத் தூதராக பதவியேற்பது ஜனாதிபதி விஜேதுங்காவின் உத்தரவின் மீது தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

புதுடில்லி பயணத்தைத் தாமதப்படுத்தும்படி திரு. திலகரத்னாவை ஜனாதிபதி கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதக் கடைசியில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பதவியில் இருந்து ஓய்வு பெறவிருந்த டாக்டர் நெவில் கனகரத்னாவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

திரு பேர்னாட் திலகரத்னா, ராஜதந்திர சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னோடியாக புதுடில்லியில் இலங்கைத் தூதராகச் சில காலம் கடமையாற்றத் திட்டமிட்டிருந்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்
# 74 கிராம சேவகர் பிரிவுகள் விடுதலைப் புலிகள் வசம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 74 கிராமசேவையாளர் பிரிவுகள் இன்னும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா மட்டக்களப்பில் அரச அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் இதனை ஒப்புக் கொண்டார்.

236 கிராமசேவையாளர் பிரிவுகளில் 132 பிரிவுகள் அரச கட்டுப்பாட்டில் உள்ளன. 30 கிராமசேவையாளர் பிரிவுகள் அரச கட்டுப்பாட்டில் இன்னும் முற்றாகக் கொண்டுவரப்படவில்லை. 74 கிராமசேவையாளர் பிரிவுகள் இன்னும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ-எ)

## வவுனியா, மதவாச்சிக்கு மாற்றலாகிய
# மின்சாரசபை ஊழியர் மீண்டும் வடக்கே வந்தனர்!

யாழ்ப்பாணம், மே 3

வவுனியா, மதவாச்சி போன்ற இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த மின்சாரசபையின் ஆக்க வேலைப்பகுதியைச் சேர்ந்த 52 ஊழியர்கள் அண்மையில் மீண்டும் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மின்சாரசபை வேலைகள் நடைபெறாத காரணத்தால் இவர்கள் மதவாச்சி, வவுனியா மின்சார சபைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். (த-17)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்மே. 5

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம் வெளியிடும் "யாழ்ப்பாணத்து தமிழ் கிறிஸ்தவக் கலைஞர்கள்" "மகனோ மரியாள்" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ் பொது மருத்துவமனைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

### ஈஸ்வராம்பா நினைவு விழா

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தின் பாலவிகாஷ் மாணவ மாணவியரின் ஈஸ்வராம்பா நினைவு விழாவும் சிறுவர் தினமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளன.

நிகழ்ச்சிகள் திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் உள்ள சேவா நிலைய மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். பிற்பகல் 4-45 மணிவரை பூசை, பஜனை, பேச்சு, கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும்.

இவ் விழாவில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (அ)

### சிறிமாவோ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கு மக்கள் செல்வாக்குக் குறைந்து விட்டது என்றும், அதனை மீளப்பெறுவது கடினம் என்றும் அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இதேவேளை, ஆய்வறிக்கை வெளியானதைத் தொடர்ந்தே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிமாவையும், சந்திரிகாவையும் சந்தித்துப் பேசியதாகவும் அறிய வந்துள்ளது. (அ-9)

## மரண அறிவித்தல்

### மாசிலாமணி தில்லைநாதன்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு புதிய சுதிரேசன் தெரு "நாதன் கபே" உரிமையாளருமான மாசிலாமணி தில்லைநாதன் 4 - 5 - 94 புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாசிலாமணி மாணிக்கவாசகர்
(சகோதரர்)

30/4, சீனிவாசகம் வீதி,
கொட்டடி. (30747)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 328/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org